aanmeegamalar.com

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

ராமநாதபுரம்

# வழிவிடு முருகன்கோவில் பங்குனி உத்திரம் சிறப்பிதழ் 2026

aanmeegamalar.com



ராமநாதபுரம் வரம் தரும் வழிவிடு முருகன்









மக்களின் நன்மதிப்பை பெற்ற

ராமநாதபுரம் வழிவிடு முருகன் பங்குனி உத்திர விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்

செல்: 9025161717

## ராம் சாய் ஹோட்டல்

(சைவம்)






எங்களிடம் திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகளுக்கு ஆர்டரின் பேரில் சைவ உணவுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

G.H. ரோடு மற்றும் கேணிக்கரை, இராமநாதபுரம்.

# சர்வமும் வசமாக்கும் முருக மந்திரங்கள்

மூலமந்திரம் என்று நாம் கூறு வது ஓம் சரவண பவ இந்த மந்திரத் தை முறையாக கூறினால் இந்தப் பிறவி மட்டுமல்லாமல் நம்மு டைய ஏழேழு பிறவிகளுக்கும் அதைத் தாண்டி இறைவனின் திருவடியை அடை வதற்கும் உதவி புரியும் மந்திரம்

### சரவணபவ

மந்திரத்தை உச்சரித்தால் சர்வமும் வசமாகும்.

### ரவணபவச

மந்திரத்தை உச்சரித்தால் நம் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து பொருளும் நம்மை வந்து சேரும்.

### வணபவசர

மந்திரத்தை உச்சரித்தால் நமக்கு தெரிந்த எதிரிகள் மற்றும் மறைமுகமாக நமக்கு இருக்கும் எதிரிகள் என்று அனைத்து வகையான எதிரிகளையும் நம்மால் வெல்ல முடியும்.

### ணபவசரவ

மந்திரத்தை உச்சரித்தால் நமக்கு இருக்கக்கூடிய எப்பேற்பட்ட நோயாக இருந்தாலும் அந்த நோய்கள் அகன்று விடும்.

### பவசரவண

மந்திரத்தை உச்சரித்தால் நாம் செய்யும் தொழிலில் நமக்கு சிறந்த ஞானத்தை முருகப்பெருமான் அருள்வார்.

### வசரவணப

மந்திரத்தை உச்சரித்தால் நமக்கு முக்தி நிச்சயம் கிடைக்கும்.

# முருகனின் சிறப்பும் அற்புத தகவல்களும்

- முருகன் அழித்த ஆறு பகைவர்கள் ஆணவம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சர்யம்.
- முருகப்பெருமான் போர் புரிந்து அசுரர்களை அழித்த இடம் மூன்றாகும். 1. சூரபத்மனை வதம் செய்ததுதிருச்செந்தூர், 2. தாரகாசுரனை வதம் செய்தது திருப்பரங்குன்றம், 3. இந்த இருவரின் சகோதரனான சிங்க முகாசுரனை வதம் செய்தது போரூர் ஆகும்.
- செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் அதிகாலையில் குளித்து முடித்துத் தூய்மையுடன் ஸ்ரீஸ்ரீ சுப்பிரமண்ய அஷ்டகம் ஓத வேண்டும். இதனால் தோஷம் விலகி நன்மை உண் டாகும்.
- முருகப்பெருமானின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில் அபயகரம், கோழிக்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல் என்ற ஆறு ஆயுதங்களும், இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் வரமளிக்கும் கை, தாமரை, மணி, மழு, தண்டாயுதம், வில் போன்றவையும் இருக்கும்.
- கந்தபுராணத்தில் வரும் சுப்பிரமணியஸ்தோத்திரம் தினசரி அதிகாலையில் படிப்பவர்களது அனைத்துப் பாவங்களும் நிவர்த்தியாகும்.
- முருகப் பெருமானை வணங்கத் திதி, சஷ்டி, விசாகம், கார்த்திகை, திங்கள், செவ்வாய், ஆகிய உகந்த நாட்கள் ஆகும்.
- முருகன் கங்கையால் தாங்கப்பட்டான். இதனால் காங்கேயன் என்று பெயர் பெற் றான். சரவணப் பொய்கையில் உதித்தான். ஆகையினால் சரவண பவன் என்று அழைக்கப்பட்டான். கார்த்திகை பெண்களால் வளர்க்கப் பட்டதால் கார்த்திகேயன் என்றும் சக்தியினால் ஆறு உருவமும் ஓர் உருவமாக ஆக்கப்பட்டதால் கந்தன் என்றும் பெயர் கொண்டான்.
- முத்தமிழால் வைதாரையும், வாழ வைப்பான் முருகன் என்று அருட்கவி அருணகிரி பாடியுள்ளார்.
- அக்கினி, இந்திரன், வருணன், பிரகஸ்பதி, ஹிரண்ய கர்ப்பம் ஆகியோரின் கூட்டுக் கலவையே முருகன் ஆவான்.
- முருகனின் கையில் உள்ள வேல் இறைவனின் ஞானசக்தி எனப் பெயர் பெறும்.
- முருகனே திருஞான சம்பந்தராய் அவதாரம் செய்தார் என்று பலர் பாடியுள்ளனர்.
- பிரமசரியகிருகஸ்தசந்நியாசக் கோலங்களில் முருகனை மட்டுமே காண முடியும். பிற கடவுள்களுக்கு இல்லாத சிறப்பு இது.



- தமிழகத்தில் முருகனுக்குக்குடவரைக் கோயில்கள் உள்ள இடங்கள் கழுகுமலை, திருக்கழுக்குன்றம், குன்றக்குடி, குடுமியான்மலை, சித்தன்னவாசல், வள்ளிக் கோயில், மாமல்லபுரம்.
- பசிபிக், சிஷில்ஸ், பிஜி, மடகாஸ்கர் நாடுகளிலும் முருகன் வழிபாடு உள்ளது.
- மலைகளில் குடி கொண்டுள்ள குமரனுக்குச் சிலம்பன் என்றோரு பெயர் உள்ளது.
- முருகனுக்கு விசாகன் என்றும் ஒரு பெயர் உண்டு. விசாகன் என்றால் மயிலில் சஞ்சரிப்பவன் என்பது பொருளாகும்.
- முருகனின் கோழிக் கொடிக்கும் குக்குடம் என்றோர் பெயருண்டு. இந்தக் கோழியே வைகறைப் பொழுதில் ஓங்கார மந்திரத்தை ஒளி வடிவில் உணர்த்துவது ஆகும்.
- முருகப்பெருமானுக்கு உகந்த மலர்கள் முல்லை, சாமந்தி, ரோஜா, காந்தன் முதலியவை ஆகும்.
- முருகனை ஒரு முறையே வலம் வருதல் வேண்டும்.
- முருகனைப் போன்று கருப்பை வாசம் செய்யாத வேறு தெய்வம் வீரபத்திரர்.
- முருகப்பெருமானுக்காகக் கட்டப்பட்ட முதல் திருக்கோவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒற்றைக் கண்ணூர்த் திருக்கோவில் ஆகும். முதலாம் ஆதித்த சோழன் இதனைக் கட்டினான். இந்தக் கோவிலில் முருகனுக்கு யானை வாகனமாக உள்ளது. ஒரு திருக் கரத்தில் ஜபமாலையும், மறுகை யில் சின் முத்திரையும் கூடிய நிலையில் இங்கே அருள் பாலிக்கிறார்.
- முருக வழிபாடு என்பது ஷண்மதம் என்று சொல்லப்படுகின்றது.
- முருகன் சிறிது காலம் நான்முகனுக்குப் பதில் படைப்புத் தொழிலையும் செய்திருக் கிறார். இதனை உணர்த்தும் வகையில் திண் டுக்கல்லில் இருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ள சின்னாளப்பட்டியில் நான்கு தலையுள்ள முருகன் ஆலயம் அமைந்துள்ளது.
- கந்தனுக்குரிய விரதங்கள்: 1. வார விரதம், 2. நட்சத்திர விரதம், 3. திதி விரதம்.
- முருகனின் மூலமந்திரம் ஓம் சரவணபவாய நம என்பதாகும்.

# முருகனும் பன்னிரு கைகளும்

முருகனின் பன்னிருகரங்களில் இரு கரங்கள் தேவர்களையும், முனிவர்களையும் காக்கின்றன.

மூன்றாவது கை அங்குசத்தினைச் செலுத்துகிறது.

மற்றொரு கை ஆடை உடுத்திய தொடையில் பதிந்திருக்கிறது.

ஐந்து மற்றும் ஆறாவது கைகள் வேலைச்சுழற்றுகின்றன.

ஏழாவது கை முனிவர்களுக்கு அரும் பொருளை உணர்த்துகிறது.

எட்டாவது கை மார்பில் உள்ள மாலையோடு விளங்குகிறது.

ஒன்பதாவது கை வளைகளோடு சுழன்று வேள்வியை ஏற்கிறது.

பத்தாவது கை மணியை ஒலிக்கிறது. பதினோராவது கை மழையை அருள்கிறது.

பன்னிரண்டாவது கை மணமாலை சூட்டுகிறது.

சேலஞ்ச்
Detergent Cake, Washing Powder & Detergent liquid
சேலஞ்ச் சுத்தத்தின் வாசனை...!
Trade Enquiry - 72003 01382







KMANIS
ராமநாதபுரம் வழிவிடு முருகன் கோவில் பங்குனி உத்திர விழாவிற்கு அன்புடன் அழைக்கிறோம்
உ
ஸ்ரீ ஆதிகோரக்கி நாதர் துணை
98654 98333
மணி நாட்டு மருந்து கடை
எல்லா விதமான நாட்டு மருந்துகள், முகத்தில் வரும் கருப்பு, கருவளையம், முகப்பொழிவுக்கு சிறந்த ஆயுர்வேத கிரீம்கள், ஆண்மை சம்பந்தமான பொருள்கள், குதிக்கால்வலி, முழங்கால் வலிகளுக்கு சிறந்த ஆயுர்வேத மருந்துகள் கிடைக்கும்
வாடிக்கையாளர்கள் உள்ளே வந்து மூலம் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம்
12, அரண்மனை, ராஜவீதி, பார்வதி நெய்கடை, பீம விலாஸ் அருகில் இராமநாதபுரம்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்
aanmeegamalar.com
விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்
e-magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்
படியுங்கள்... aanmeegamalar.com இதுவரை வெளிவந்த 185 e-book கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

# ஒரே கர்ப்பகிரகத்தில் ஆனைமுகனும் ஆறுமுகனும் அருள்பாலிக்கும் அதிசய திருக்கோவில்

ராமநாதபுரம் நகரத்தில் 'ஸ்ரீ வழிவிடு முருகன்' கோவில்கர்ப்பகிரகத்தில் ஆனைமுகனும் ஆறுமுகனும் சேர்ந்து அருள்பாலிப்பது விசேஷமானதும் அரிதானதுமான ஒன்றாக உள்ளது.

இது போன்ற அமைப்பு உலகில் வேறு எந்த கோவிலிலும் கிடையாது.

பொதுவாக எல்லா கோவில்களிலும் நுழைந்தவுடன், இடதுபுறம் விநாய கரும் வலதுபுறம் முருகனும் இருப் பார்கள். இந்த 'ஸ்ரீ வழிவிடு முருகன்' கோவில் கர்ப்பகிரகத்தில் ஆனை முகனும் ஆறுமுகனும்சேர்ந்து அருள்பாலிப்பது மிக விசேஷமானதும் அரிதானதுமான ஒன்று.



இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள, ஒரு 500 ஆண்டுகள் பழைமையான, ஸ்ரீ வழிவிடு முருகன் கோவிலில் தான் இந்த அதிசயத்தைக்காண முடி யும். அண்ணன் தம்பி இருவருமே ஒன்றாக காட்சியளிக்கிறார்கள்.

சொத்துக்காக சண்டையிட்டு கோர்ட்படியேறும் சகோதரர்கள் இங்கு வந்து வழிபட்டால் சமாதானமாகப் போகவும் இருவரும் வாழவும் வழி பிறக்கிற படியால் இவர் 'ஸ்ரீ வழிவிடு முருகன்' என்று அழைக்கப்படுகிறார். ராமநாதபுரம் நீதிமன்றம் இந்தக் கோவிலுக்கு அருகில் இருந்ததால் விசாரணைக்காக வருபவர்கள் தங் கள் வழக்குகளில் வெற்றி பெற இந்தக் கோவிலில் பிரார்த்தனை செய்வது வழக்கம். அவர்களுக்கு வெற்றி கிடைத் ததாலும் 'ஸ்ரீ வழிவிடு முருகன்' கோவில் இங்கே பிரசித்தி பெற்றி ருக்கிறது.

பல வருடங்களுக்கு முன்பு தற்போ தைய கோவில் இருக்கும் இடத்தில் போதி மரம் என்று சொல்லப்படும் பிப் பல் மரம் இருந்ததாம். இந்த மரத்தின் அடியில் முருகப் பெருமானின் ஒரு சிறிய வேல் ஆயு தம் நடப்பட்டு நீண்ட காலமாக வழி படப்பட்டதாம்.

இக்கோவிலின் தல விருட்சம் 'சாயா' என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீ சனீஸ்வரரின் தாயார் பெயர் சாயா தேவி. அன்னையின் சொல்படி இங்கே வரும் பக்தர்களுக்குஅருள்புரிவதாக ஐதீகம். இதே தல விருட்சம் ஸ்ரீலங்காவி லுள்ள கதிர்காமம் முருகன் கோவிலி லும் உள்ளது.

நவகிரகங்கள், தட்சிணாமூர்த்தி, துர்க்கை, பைரவர், இடும்பன் ஆகியோருக்கும் தனித்தனியாக சன்னதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கே மற்றொரு விசேஷம் பக்தர் கள் கூட்டம் எவ்வளவு வந்தாலும் எந்த வித சிரமமும் இன்று முரு கனை தரிசித்து மனமார வணங்கி வழிபட எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள் ளன. மூலவரை சுற்றி வரும் போது கோவில் பிரகாரங்களில் திருப்புகழ், கந்த புராணப் பாடல் கள், சஷ்டி கவசம், சண்முக கவசம் என பல பாடல்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. பள்ளியறை வழிபாட்டுக்காக ஒரு மண்டபம் அமைக்கப்பெற்று ஒவ் வொரு நாள் இரவிலும் ஊஞ்சல் வழிபாடும் நடைபெற்று வருகிறது.

இந்தக் கோவிலில் கொண்டாடப் படும் மிகவும் பிரசித்தி பெற்ற பண்டிகை பங்குனி உத்திரமாகும். இந்த ஆண்டு 86–வது ஆண்டு பங்குனி உத்திரத் திருவிழா கடந்த 23–ந்தேதி காப்புகட்டும் நிகழ்ச்சி கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஏப்ரல் 1–ந் தேதி, பங்குனிஉத்திரத் தன்று பக்தர்கள் 4 கி.மீதொலை விலுள்ள நொச்சி வயல் ஊரணிக் கரையில் அமைந்துள்ள பிரம்மபுரீவரர் ஆலயத்திலிருந்து நடை பயணமாக, பால் குடம் ஏந்தி, காவடி எடுத்து 'அரோகரா' ஒலி விண்ணைப் பிளக்க கூட்டம் கூட்டமாக வந்து வழிபட்டு 'ஸ்ரீ வழிவிடு முருகனால்' வாழ்க்கையை நல்ல முறையில் வாழ வழிவிடப்பட்டார்கள். ராமநாதபுரம் நகரில் நடக்கும் முக்கிய திருவிழா வாக அருள்மிகு ஸ்ரீ வழிவிடு முருகன் கோவில் பங்குனி உத்திரம் விழா ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.


ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை



வாசுதேவன் பாத்திரக்கடை

முகவையின் மபெரும் பாத்திரக்கடை

வாசுதேவா என்றால் வளம் பொங்கும்! வாசுதேவன் பாத்திரத்தில் ராசி பொங்கும்!!



ராமநாதபுரம் வழிவிடு முருகன் கோவில் பங்குனி உத்திர விழாவிற்கு அன்புடன் அழைக்கின்றோம்



கல்யாண சீர்வரிசைக்கு தேவையான பாத்திரங்கள், கிரைண்டர், மிக்ஸி, குக்கர், கேஸ் ஸ்டவ் மற்றும் அனைத்தும் வாங்க கைராசியான நிறுவனம்

12,பி.கே.சாமி தெரு, இராமநாதபுரம் செல்: 88074 08807

# முருகனின் தோற்றங்களும் வணங்குவதால் கிடைக்கும் பலனும்



**ஸ்ரீ பால சுவாமி:** இவர்,உடல்ஊனங்களையும், குறைகளையும் அகற்றும்தெய்வம். இவரை வழிபடுபவர்களுக்கு உடல் நலம் கிடைக்கும். திருச்செந்தூர்,திருக்கண்டிர், ஆண்டாள் குப்பம் கோல்களில் பாலசுவாமி திருவுருவம்இருக்கிறது.

**ஸ்ரீ தேவசேனாதிபதி:** இவரைவழிபட்டால் மங்களகரமான வாழ்வு கிடைக்கும். சென்னிமலை யாண்டவர் திருக்கோயிலில் கர்ப்பக்கிரக மாடம் ஒன்றில் இந்த திருவுருவம் உள்ளது.

**ஸ்ரீ பிரம சாஸ்தா:** இவரைவழிபட்டால் எல்லா வகைவித்தைகளிலும் தேர்ச்சி பெறலாம். சகல வித கலையறிவும் அதிகரிக்கும். கல்வியில் தேர்ச்சி கிட்டும். காஞ்சிபுரத்தில் உள்ள குமரக் கோட்டம் ஆனூர், பாகசாலை, சிறுவாபுரி ஆகிய இடங்களில் பிரம்மசாஸ்தா திருக்கோலம் உள்ளது.

**ஸ்ரீ கந்தசுவாமி:** இவரை வழிபட்டால் சகல காரியங் களும் சித்தியாகும். பழனிமலை ஆண்டவர் திருவடிவம் இது.

**ஸ்ரீ கஜவாகனர்:** இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகி ஓடும். திருமருகல், மேல்பாடி, சிதம்பரம் நடராஜர் கோயில் கீழைக் கோபுரம் ஆகிய இடங்களில் யானை மீதிருக்கும் இவரது திருவுருவம் உள்ளது.

**ஸ்ரீ கிரவுஞ்சபேதனர்:** இவரை வழிபட் டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம்அகலும். திருநெல்லிக்கா, திருக்குறங்குடி,திருநளி பள்ளி ஆகிய இடங்களில்இவரது திருவுருவம்உண்டு.

**ஸ்ரீ கார்த்திகேயா:** இவரை வழிபட்டால் சகல சவுபாக்கி யங்களும் வந்து சேரும். கார்த்திகை நட்சத்திர நாட்களில் இவரை வழிபடுவது விஷேசமான பலன்களைத் தரும். கும்ப கோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் கோயிலிலும், தாராசுரம் ஐராவதீச்வரர் கோயிலிலும் கார்த்திகேயர் திருவுருவம் உள்ளது.

**ஸ்ரீ குமாரர்:** இவரை வழிபட்டால் ஆணவம் அடியோடு நீங்கும். நாகர் கோவில் அருகில் இருக்கும் குமாரகோவிலில் இவரது திருவடிவம் உண்டு. கங்கை கொண்ட சோழபுரத்தில் இவருக்குப் பஞ்சலோக விக்கிரகம் இருக்கிறது.

**ஸ்ரீ சேனானி:** இவரை வழிபட்டால் பகை அழி யும். போட்டிகளில் வெற்றிகிடைக்கும். பொறாமை நீங்கும். தேவிகாபுரம் ஆலயத்தில் சேனானி திருவுருவம் இருக்கிறது.

**ஸ்ரீ சரவணபவர்:** தன்னை வழிபடும் அடியவர்களுக்கு மங்கலம், ஒலி, கொடை, சாத்வீகம், வீரம் முதலிய குணங்களை அளிப்பவர். சென்னிமலை, திருப்போரூர் ஆகிய இடங்களில் இவரது திருவடிவம் இருக்கிறது.

**ஸ்ரீ சக்திதரர்:**இந்த முருகனைவழிபட்டால் நினைத்த காரியங்கள் வெற்றியுடன்முடியும். திருத்தணிகையில் எழுந்தருளிருக்கும்மூலவர் திருவடிவம் ஞானசக்திதரர்'திருக்கோலமாகும்.

**ஸ்ரீ சிகி வாகனர்:** மயில் மீது இருக்கும் முருகன் அருட்கோலம் இது. ஆலயம் பலவற்றில் அழகுற அமையும் திருவடிவம். தன்னை வழிபடுபவர்களுக்கு இன்பமான வாழ்வு அளிப்பவர்.

**ஸ்ரீ சோமாஸ்கந்தர்:** இவரை வழிபட்டால் சிவசக்தியை சேர்த்து வழிபட்ட பலன் கிடைக்கும். ஆலயப் பெருந் திரு விழாவின் போது பஞ்சமூர்த்திகளில் முதல்வராகவும் திருத்தேரில் மீது எழுந்தருளி அருள் தருபராகவும் உள்ள அற்புத வடிவம்.

**ஸ்ரீ சுப்பிரமணியர்:** இவர் தன்னைவழிபடும் பக்தர்களின் வினைகளை நீக்கி ஆனந்தப் பேற்றினை அளிக்கக் கூடியவர். நாகை மாவட்டத்திலுள்ள திருவிடை கழி முருகன் கோயில் மூலவர் சுப்பிரமண்யர் ஆவார்.

## பங்குனி உத்திரம் தினத்தில் முருக பக்தர்களுக்கு சிறப்பு அன்னதானம் வழங்கும்

# பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி அம்பாளின் பக்தர்கள் குழு



ராமநாதபுரம் வழிவிடு முருகன் கோவில் பங்குனி உத்திரம் திருவிழா காண வருகை தரும்

ஆயிரக்கணக்கானமுருக பக்தர்களுக்கு கடந்த 15 ஆண்டுகளாக சிறப்பு அன்ன தானம் செய்யும் அன்ன தர்மம் பணியை மானாமதுரை ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் ராமநாதபுரம் அம்பாளின் பக்தர்கள் குழு சார்பில் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 16 வது ஆண்டு அன்னதானம் புதன் கிழமை

பங்குனி உத்திரம் அன்று காலை 10:00 மணி முதல் பங்குனி உத்திரம் நன்னாளில் இராமநாதபுரம் வழிவிடுமுருகன் ஆலயம் அருகில் அன்னதானம் நமது சுவாமி ஜீ அருள்சியுடன் நமது அம்மா சுவாமிகள் மாபெரும் அன்னதானம் தொடங்கி வைக்கிறார்கள்.

பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல வழிவிடு முருகன் சுவாமி அருள் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மானாமதுரை ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி ஸாக்த மடாலயம். அம்பாளின் பக்தர்கள் குழுவினர். இராமநாதபுரம்.












உ

அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும்



இராமநாதபுரம் அருள்மிகு ஸ்ரீ வழிவிடு முருகன் கோயில் 86-ஆம் ஆண்டு பங்குனி உத்திரம்



திருவிழாவிற்கு வருகை தரும் அனைத்து பக்தர்களையும் வருக வருக என அன்புடன் அழைக்கின்றோம்

என்றென்றும் குருவின் திருவருளுடன்

ஸ்ரீ பாலாஜி ஜுவல்லரி

ஸ்ரீ கோரக்கர் சித்தர் ஹெர்பல்ஸ் & பூஜா ஸ்டோர்

எங்களிடம் சதுரகிரி மலையில் இருந்து தயார் செய்து வரும் மூலிகை கற்பூவள்ளி தைலம் (தலைவலி, ஜலதோஷம், மூக்கடைப்பு) மற்றும் மூட்டுவலி தைலம் (கை, கால், மூட்டுவலி) குணமாக்கும் தைலம் கிடைக்கும். மேலும் எங்களிடம் ஒரிஜினல் சுரண்டை பசுஞ்சான விபூதி மற்றும் 18 வகையான மூலிகை வாசனை திரவியம் கொண்டு செய்த பஞ்சகவ்யம் (யாகம் அபிஷேகம் மற்றும் வீடு, தொழில் ஸ்தாபனங்களில் தெளிக்க) பயன்படுத்தும் திரவியம் கிடைக்கும் மேலும் ருத்ராட்சம் 5,6 முகம், கருங்காலி, சந்தனம், துளசி மாலைகள் கிடைக்கும்.

தொடர்புக்கு:

B.பாலாஜி 9788432628 - B.பிரசன்னா 9442040390

பிருந்தாவனம் காம்ப்ளக்ஸ், வண்டிக்காரதெரு, இராமநாதபுரம்

## முருகன் கோவிலில்
# தம்பதியர் சமேதராக காட்சி தரும் சூரியன்

ராமநாதபுரம் வழிவிடு முருகன் கோவிலில் உள்ள நவகிரக சன்னதியில் நவகிரகங்களின்

சூரியன்தேவியர்களான உஷா பிரதியூஷாவுடன் காட்சி தருகிறார்.

தமிழகத்தில் இக் கோவிலில் உள்ள நவகிரக சன்னதியில் மட்டுமே

பக்தர்கள் நவகிரகங்களுடன் சூரியனைதேவியருடன்தரிசனம் செய்ய முடியும்.



முருக பக்தர்களின் துன்பத்தை போக்கும் நவகிரக சன்னதியில் ஒன் பது முறை வலம் வந்து தரிசனம் செய்து வருகின்றனர்.



## செல்வ வளம் தரும்
# திருத்தணி முருகன்

முருகப்பெருமான் ஞானத்தை அருளும் ஞானசக்திதரனாக திருத் தணியில் வீற்றிருக்கிறார். சாந்தமான முகத்துடன், இடது கையைத் தொடையில் வைத்து, வலது கையில் வேல் தாங்கி காட்சி தருகிறார்.

தாரகாசுரனிடம் போர்புரிந்து சக்ராயுதத்தை இழந்த திருமால், மீண்டும் தன் சக்ராயுதத்தை பெற்றுத் தந்த பெருமை கொண்டவர் இம்முருகனே. முருகப்பெரு மானுக்குரிய வாகனமாக எங்கும் மயில் இருக்க, இங்கு யானை வாகனமாக அமைந்துள்ளது.

லட்சுமியின் அம்சமான இந்த யானையுடன் கூடிய முருகனை வழிபடுவோருக்கு தேவர்களுக்கு நிகரான செல்வ வளம் உண்டாகும் என்பதுஐதீகம்.

இதன் காரணமாகத்தான் புதுவருடப் பிறப்பின் போது இந்தத் தலத்தில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

## உடல் வசீகரத்தை விரும்புபவர்களுக்கு
# உதவும் கந்த அலங்காரம்



இறைவனை நகை, அணிகலன் கள் போன்றவற்றை பயன்படுத்தி அலங்கரிப்பார்கள், இது கடவுள் மீது பக்தர்களுக்கு உள்ள அதீத பக்தியின் வெளிப் பாடாகும். இதிலும் குறிப்பாக முருகன், பெருமாள் போன்ற வர்கள் அலங் காரப்பிரியர்கள்,இவர்களைவித விதமாக பக்தர்கள் அலங்கரிப் பார்கள். இதைப்போன்றுவார்த் தையால் இறைவனை அலங்கரிக் கும் பாடல்களும் இந்துமதத்தில் அதிகம் உள்ளது. இதில் முருகனுக்கு பாடப்படும் "கந்த அலங்காரம்" மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

அலங்காரத்தால் எப்படி இறைவனை வர்ணிப்போமோ, அதே போல வார்த் தையால் வர்ணிப்பது மிகவும் சிறப்பு. இதன் உட்பொருள் மீண்டும் மெய்ஞானத்தைதான் குறிக்கிறது.

இந்த கந்தன் அலங்காரத்தை, புற வாழ்க்கைக்கு பயன் படுத்தலாம்.

புற வாழ்க்கைக்கும், மேனி அழகிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க கூடியவர்கள் அது தொடர்பான துறையிலே இருப்பவர்கள் உடல் வசீகரமாக இருக்க நினைப்பவர்கள் அனைவரும் இந்த கந்த அலங்காரத்தை ஓதி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

## மனம் பாரமாக இருக்கும் சமயத்தில்
# முருகவேல் நினையுங்கள் பாரம் குறையும்

முருகனின் வேலுக்கு அப்படி என்ன சிறப்பு..!!

நாம் வணங்கும் தெய்வங்கள் பெரும்பாலா னவை ஆயுதம் ஏந்திய தெய்வங்களே. அந்த வரிசையில் காவல் தெய்வங்கள். பார்வதி, சிவ பெருமான் மற்றும் முருகன் ஆகிய தெய்வங்களை குறிப்பிட்டு சொல்லலாம்.

முருகன் என்றாலே நம் நினைவிற்கு வருவது மயிலும், வேலும் தான். புராணங்களின் படி அதிக முக்கியத்துவம் வாய்ந்த மிக முக்கியமான ஆயுதமாக முருகனின் வேல் கருதப்படுகிறது.

வேலுண்டு வினையில்லை. மயிலுண்டு பய மில்லை" என்பதே தொன்று தொட்டு சொல்லும் கூற்று. முருகனுக்கு இந்த வேலினால் வேல் முருகன் என்ற பெயரும் உண்டு.

சூரபத்மன் எனும் அரக்கனை அழிக்க தேவி பார்வதி தன்னுடைய சக்திகள் அனைத்தையும் திரட்டி வேலை வடிவமைத்து, அதனை கொண்டு சூரனை வதைக்க சொன்னதாக புராணங்கள் கூறுகின்றன. அதாவது வேல் என்பதே சக்தியின் அம்சம். அதனாலேயே வேலிற்கு சக்தி வேல் என்ற பெயரும் உண்டு.

முருகனின் வேலுக்கு அப்படி என்ன சிறப்பு!

"வெல்" என்ற வினைச்சொல்லே நீண்டு 'வேல்" என்ற பெயர்ச்சொல் ஆகிறது. ஆகவே, வேல் என்றால் வெற்றி என்று பொருள்படும்..

பராசக்தியின் வடிவமே வேலாயுதம் என்பார் கள். அறிவு, ஞானம், பொருள், இன்பம், திரு வருள், திருவருட்சக்தி முதலிய சொற்கள்வேலின் உருவமாக உள்ள பராசக்தியையே குறிப்பனவாகும்.

முருகப்பெருமானுக்கே உரிய ஞானசக்தி வேலாயுதம். வெல்லும் தன்மையுடையது வேல். தன்னை ஏந்தியவருக்கு நிச்சயம் வெற்றியைத் தருவதால், அதற்கு 'வெற்றிவேல்" என்ற பெயரும் உண்டு.

வேல் உணர்த்துவது என்னவென்றால்... வேலின் அடிப்பகுதி ஆழமாகவும், இடைப்பகுதி விசாலமாகவும், நுனிப்பகுதி கூர்மையாகவும் திகழ்கிறது.

வேலைப்போன்று அறிவானது கூர்மையான தாகவும், அகன்றும், ஆழமாகவும் இருக்க வேண் டும் என்பதையும் உணர்த்துவதாக இருக்கிறது.

முருக வழிபாட்டில் தொன்மை வாய்ந்தது வேல் வழிபாடு. இன்றும் பல முருகன் கோவில் களில் வேலுக்கு மட்டுமே பூஜை செய்து கொண் டிருக்கின்றனர்.

வேல் வழிபாட்டின் எளிமைப்படுத்தப்பட்ட நவீன வடிவமே சக்திவேல் வழிபாடு. சக்திவேலை வணங்குவது என்பது அன்னை பராசக்தியையும், தனயன் முருகனையும் ஒருசேர வணங்குவதாகும்.

மனம் பாரமாக இருக்கும் நேரங்களில் மனதுக்குள் சக்திவேலை நினைத்துக் கொண்டு 'ஓம் ஐம் ஹ்ரீம் வேல் காக்க" என்று சொன்னால்; மனம் லேசாகி விடும்..!

# ஒவ்வொரு ராசிக்குரிய முருகன் கோயில்கள்!!



எல்லா முருகன் கோவிலும் சிறப்புதான்... முருகன் என்றாலே சிறப்புதானே...

முருகன் கோவில்களில் முதன் மையான கோயில்.. மயிலம் சுப்பிர மணியர் கோயில் செவ்வாயின் ஆதிக்கம் அதிகம் உள்ள முருகன் கோயில் இது. திண்டிவனம் அருகே உள்ளது இந்த கோயில். ஒரு முறை சென்று வாருங்கள்... வாழ்வில் நல்ல மாற்றத்தை உணர்வீர்கள்..

மேலும் செவ்வாய் ஆகர்ஷனம் அதிகம் உள்ள கோயில்கள் பற்றின விவரங்கள் கீழே...

இதன் விசேஷம் என்னவென்றால் இதன் அருகே உள்ள மண் எல்லாம் சிவப்பு நிறமாகத் தான் இருக்கும்.

ராசிப்படி முருகன் கோயில்கள்..

**மேஷம்:** தாண்டுகுடி முருகன் கொடைக்கானல்,
**ரிஷபம்:** சுவாமிமலை:
**மிதுனம்:** செவலூர் பூமினாதேஸ்வரர்
**கடகம்:** பழனி முருகன்
**சிம்மம்:** திருபரங்குன்றம் முருகன்
**கன்னி:** திருசெந்தூர் முருகன்
**துலாம்:** வைதீஸ்வரன் கோயில் முத்துக்குமார சுவாமி
**விருச்சிகம்:** மன்னச்சநல்லூர் பூமி நாதேஸ்வரர்:
**தனுசு:** திருத்தணி முருகன் கோவில்
**மகரம்:** வயலூர் முருகன்
**கும்பம்:** ஓரக்காட்டு பேட்டை குணம் தந்த நாதர் செங்கல்பட்டு அருகில்
**மீனம்:** திருவக்கரை பத்ர காளி அம்மன் கோவில்

குறிப்பிட்ட கோயில்களில் உள்ள முருகனை, குறிப்பிட்ட ராசிகாரகள் வழிபட நன்மை நிச்சயம் உண்டு.



# பங்குனிமாதமும் அதன் சிறப்புகளும்



தமிழ் மாதங்களில் 12வது மாதமான பங்குனியும், 12வது நட்சத்திரமான உத்திரமும் இணையும் புனித நாள் தான் பங்குனி உத்திரம். விரதங்களில் முக்கியத்துவம் வாய்ந்தது பங்குனி உத்திர விரதமும் ஒன்று. இந்த விரதத்தை கல்யாண விரதம், திருமண விரதம் என்றும் கூறுவார்கள். உத்திர நட்சத்திர நாயகன் அதாவது அதிபதி சூரியன். அதே நாளில் நிறை நிலவும் பொருந்தும்போதுசூரியன், சந்திரனால் இரட்டைச் சிறப்புகள் கிடைக்கின்றன.

சிவபெருமானை கல்யாண சுந்தர மூர்த்தியாக பாவித்து அனுஷ்டிக்கும் விரதம் இது. சிவபெருமான், பார்வதியோடு மணக் கோலத்தில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு மதுரை யில் காட்சி தந்தருளிய திருநாள் இதுதான்.

மீனாட்சியைத் திருமணம் செய்துக் கொண்டு மீனாட்சி சுந்தரேஸ்வரராகக் காட்சி தந்ததும் இந்நாளில்தான். சிவனின் தவத்தைக் கலைத்ததால் இறைவனின் நெற்றிக் கண்ணால் மன்மதன் எரிக்கப்பட்டான். ரதியின் வேண்டுதலால் மீண்டும் மன்மதன் உயிர் பெற்ற நாளும் இதுதான்.

பர்வதராஜன் தவத்தால் பத்மத்தில் அவதரித்த பார்வதியை சிவபெருமான் கரம்பிடித்த நாளும் இதுவே.

ஸ்ரீரங்க மன்னார் ஆண்டாள் திருக்கல்யாண வைபவம் நடந்த நாளும் இதுதான். மகாலட்சுமியின் அவதார நாளும் பங்குனி உத்திர நாள்தான். மகாலட்சுமி பங்குனி உத் திர விரதத்தை அனுசரித்துதான் ஸ்ரீமகா விஷ்ணுவின் மார்பில் உறையும் பாக்கியம் பெற்றாள்.

வள்ளியின் அவதாரமும், ஸ்ரீ ஐயப்பனின் அவதாரமும், அர்ஜுனன் தோன்றியதும் பங்குனி உத்திர நந்நாளில் தான். திருமாலின் புதல்விகளான அமிர்தவல்லியும் சுந்தரவல்லியும் தெய்வானை, வள்ளியாகப் பிறவி எடுத்து முருகனையும் மணந்து கொண்டனர்.

தசரத மைந்தர்கள் ஸ்ரீ ராமன் சீதை, லட்சுமணன் ஊர்மிளை, பரதன் மாண்டவி, சத்ருக்னன் ஸ்ருதகீர்த்தி திருமணங்களும் பங்குனி உத்திரத்தன்றுதான் ஒரே மேடையில் மிதிலையில் நடைபெற்றது.

அழகுமிகு 27 கன்னியர்களை சந்திரன் மனைவிகளாக ஏற்றுக் கொண்ட தினமும் இதுதான். பங்குனித் திருநாளில்தான்வடநாட்டில் ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். திருமழப்பாடியில் நந்தி கல்யாணம் கண்டால் முந்திக் கல்யாணம்தான்.

பங்குனி மாதத்தில் ஏற்றிய தீபத்தில் சிவனும் பார்வதியும் ஐக்கிய சொரூபமாகக் காட்சி தருகின்றனர். அதனால் அன்று திருவிளக்குப் பூஜை செய்து பாவங்களை விலக்கி, பகை அகற்றி புண்ணியம் பெறலாம்.

காரைக்கால் அம்மையார் முக்தியடைந்த தினமும் பங்குனி உத்திரம்தான். லோபமுத்திரை அகத்திய முனிவரை மணந்து கொண்ட தும் இன்று தான். பூரணா, பூஷ்கலா சாஸ்தாவை யும், ரதி மன்மதனையும் கல்யாணம் செய்து கொண்டனர் என்று கந்தபுராணம் கூறுகிறது.

தேவேந்திரன் இந்திராணி, நான்முகன் கலைவாணி ஆகியோரின் திருமணங்களும் பங்குனி உத்திரத்தன்றுதான் நடைபெற்றன. பிரம்மா தன் நாவில் சரஸ்வதி இருக்கும் வாய்ப் பை பெற்றதும் இந்த நாளில் தான். இமவான் தன் மகள் பார்வதியை சிவனுக்கு திருமணம் செய்ய தேர்ந்தெடுத்தது.

காஞ்சியில் காமாட்சி அம்மன் ஆற்றுமணலை சிவலிங்கமாக பிடித்து வழிபட்டு சிவனின் அரு ளைப் பெற்றது. இடும்பன் மூலம் காவடி தூக்கும் பழக்கம் ஆரம்பித்தது.

மார்க்கண்டேயனுக்காக சிவன் காலனை தன் காலால் உதைத்த நாள். மலையரசன் இமயவானின் மகளாக பிறந்து பார்வதி என்ற பெயரில் சிவனை வேண்டி கடும் தவம் இருந்த நாள்.

இந்த நந்நாளில் கோயில்களில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகள்:

பழனியில் காவடி உற்சவம். மயிலாப்பூரில் அறுபத்து மூவர் உற்சவம். சுவாமி மலையிலும், திருச்செந்தூரிலும் வள்ளி கல்யாணம். காஞ்சிபுரத்தில் கல்யாண உற்சவம். மதுரையில் மீனாட்சி திருமணம்.

இவ்வளவு சிறப்புகள் ஒன்றாகப் பொருந்திய பங்குனி உத்திர நாளில் ஆலயம் சென்று வழிபடுவோம். பக்தர்கள், எளியோருக்கு அன்னதானம் செய்து தெய்வங்களின் ஆசியைப் பெறுவோம்.





உங்கள் பகுதி
கோவில் கும்பாபிஷேகம்,
விழாக்கள், போன்றவற்றை
இதுபோன்ற
சிறப்பு மலராக
வெளியிட தொடர்பு
கொள்ளவும்
தரமாகவும்,
சிறப்பாகவும்
செய்து தருகிறோம்...!
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203





ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன் C.V.நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்:
9994323622 / 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்: ஷியாம்சுந்தர், ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய், வேல்.

♦♦♦

வடிவமைப்பு: SML கிராபிக்ஸ் செல்: 9444228203

இதழ் வெளியிட்டு நாள்: 31.3.2026

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.


## பயம், நோய் போக்கும் சண்முக கவசம்

முருகப்பெருமானைத் தவிர வேறு யாரையும் வணங்குவதில்லை என்ற கொள்கையோடு முருகன் மீது 6666 பாடல்கள் பாடியவர் பாம்பன் சுவாமிகள். இவர் இயற்றிய சண்முக கவசம் புகழ்பெற்ற நூலாகும். கந்த சஷ்டி கவசம் போல இது பயமும், நோயும் தீர்க்கும் மருந்து என்றால் மிகையில்லை.



பாம்பன் சுவாமிகள், சென்னை தம்புச்செட்டித் தெருவில் செல்லும்போது எதிர்பாராமல் குதிரைவண்டி மோதியதில் இடக்காலில் முறிவு ஏற்பட்டது. 73 வயதில் நேர்ந்த இந்த விபத்தால் இனி சுவாமிகளால் நடக்க முடியாது என்று மருத்துவர்கள் சொல்லி விட்டனர்.

சுவாமிகள் மீது அன்பு கொண்ட சில பக்தர்கள், அவர் அருகே அமர்ந்து சண்முக கவசத்தை விடாமல் நம்பிக்கையோடு பாரா யணம் செய்து வந்தனர். “சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க” என்னும் அடியைப் பாடியபோது சுவாமி களின் கால்கள் குணமானது.

அப்போது வானத்தில் இரு மயில்கள் தோகை விரித்து ஆடிய காட்சியை சுவாமிகள் கண்டார்.

தமிழிலுள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டையும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டையும் முதலெழுத்தாகக் கொண்டு 30 பாடல்களுடன் பாடப்பட்டது சண்முக கவசம்.

தினமும் ஆறுமுறை சண்முக கவசத்தை பாடுபவர்கள் எத்தகைய நோயில் இருந்தும் விடுபடுவர் என்பது நம்பிக்கை. குறிப்பாக, முருகன் பிறந்த வைகாசி விசாகத் தன்று பாடினால் இரட்டிப்பு பலன் கிடைக்கும்.








இறைபணியில் P.முருகேசன் உரிமையாளர்

சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்

186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588

# நோய்கள் குணமாகும் விபூதி அபிஷேகம்



ராமநாதபுரம் வழிவிடு முருகன் கோவிலில் உள்ள முருகனுக்கு திங்கட்கிழமை தோறும் விபூதி அபிஷேகம் செய்து அலங்காரம் செய்யப்பட்டு காட்சி தருகிறார். இந்த அலங்காரத்தில் முருகனை தரிசிக்கும் பக்தர்கள்

தீராத நோய்கள் தீர்வதாக முருக பக்த்தர்களால் நம்பப்பட்டு வருகிறது. வாரந்தோறும் பக்தர்கள் விபூதி அபிஷேகத்தை கண்டு வழிவிடு முருகனை வேண்டி நோய்கள் குணமாகி அருள் பெற்று செல்கின்றனர்.

இக் கோவிலில் உள்ள சஷ்டி முருகனுக்கு வளர்பிறை சஷ்டி தினத்தில் பால் மற்றும் தயிர் அபிஷேகம் செய்தால் அவர்கள் வேண்டும் வரமும் திருமணம் தாமதமாகுவர்களுக்கு உடனடியாக திருமண வரன் அமைவதாக பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

கோவில் வெளியே மத்தியில் மூலவராக விநாயகர், மயில் பார்க்க வள்ளி தெய்வானை சமேத முருகர் கோவில் உள்ளே விநாயகர் நாகர், தெட்சிணாமூர்த்தி, துர்க்கை, தண்டாயுதபாணி, ஸ்கந்தர், இடும்பர் மற்றும் உற்சவர் முருகன் சன்னதிகள் உள்ளன. இங்கு இலங்கை கண்டி கதிர்காமம் முருகன் கோவிலல் வளரும் சாயாமரம் இங்கு தல விருட்சமாக உள்ளது. பல ஆண்டுகளாக இந்த மரம் உள்ளது. இங்கு ஐந்து நிமிடம் மனம் உருகி வழி விடு முருகனிடம் வைக்கப்படும் வேண்டுதல்கள் நிறைவேற்றுவதாக பக்தர்கள் தெரிவித்தனர். அனைவரும் ஒற்றுமையாக வாழ இக் கோவிலில் பிராத்தனை செய்து சென்றால் குடும்பங்களில் ஏற்படும் சண்டை சச்சரவுகள் நீங்குவதாககவும் கூறப்படுகிறது. தினமும் இந்த சாலை வழியாக நடந்து செல்பவர்கள் முதல் வாகனங்களில் செல்பவர்கள் வரை வழி விடு முருகனை மனதார வணங்கி வரங்கள் பெற்று செல்கின்றனர். இக் கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரம் திருவிழா பெரிய அளவில் நடைபெறுகிறது. இதுதவிர தைப்பூசம்,

ஆடி கிருத்திகை, கந்தசஷ்டி, பெரிய கார்த்திகை தீப விழா நடை பெறுகிறது. ராமநாதபுரம் நகரில் மத்தியில் பஸ்நிலையம் அருகில் வழிவிடு முருகன் கோவில் உள்ளது.

## வாழ வழியின்றி தவிப்பவர்களுக்கு நல்வழிகாட்டும்

# வழிவிடும் முருகன்

இராமநாதபுரம் அருள்மிகு ஸ்ரீ வழிவிடுமுருகன் திருக்கோவில் சொத்துக்காக சண்டையிட்டு, கோர்ட் படியேறும் சகோதரர்கள் இங்குவந்து வழிபட்டால் சமாதானமாக போகவும், இருவரும் வாழவும் வழி பிறக்கிறது.

பொதுவாக கோயில்களில் நுழைந்தவுடன் இடதுபுறம் விநாயகரும், வலதுபுறம் முருகனும் இருப்பார்கள். விநாயகரை முதலில் வணங்கி விட்டு கோயிலுக்குள் சென்று திரும்பி வரும் போது முருகனை வணங்குவது போன்ற அமைப்பு இருக்கும்.

ஆனால், இங்கே கர்ப்பகிரகத்தில் முருகனும் விநாயகரும் சேர்ந்து அருள் பாலிப்பது மிக மிக சிறப்பு. இத்தகைய படைப்பை மிக அரிதாகவே காண இயலும்.

**பாவம் போக்கும் சாயா மரம்:** கோயிலின் உள்ளே 'சாயா' என அழைக்கப்படும் மரம் ஒன்று உள்ளது. சனிபகவானின் தாயார் பெயர் சாயா இந்த மரத்தை சாயாதேவியின் அம்சமாக இப்பகுதி மக்கள் பூஜை செய்கிறார்கள்.

எனவே இத்தலத்திற்கு வந்து வழிபடுவோரை தனது தாயின் சொல்லுக்கு கட்டுப்பட்டு, சனி பகவான் தங்களது துன்பங்களை குறைப்பதாக ஐதீகம். இந்த மரம் இலங்கையிலுள்ள கதிர்காமம் முருகன் கோயிலிலும் உள்ளது.

**தல வரலாறு:** தற்போது கோயில் உள்ள இடத்தில் பல ஆண்டுகளுக்கு முன் அரசமரம் இருந்தது. மரத்தின் கீழ் ஒரு சிறிய வேல் நடப்பட்டு அதற்கு பூஜை செய்யப்பட்டு வந்தது. அருகிலேயே கோர்ட் இருந்ததால் விசாரணைக்காக வருபவர்கள், வழக்குகளில் வெற்றி பெற வேண்டும்



என வேண்டிச் செல்வார்கள்.

சொத்து வழக்குகளில் சிக்கி, வாழ வழியற்று நிற்பவர்கள், கிரிமினல் வழக்குகளில் சிக்கிய நிரபராதிகள் எல்லாம் இத்த முருகனை வணங்கி வாழ வழிபெற்றனர்.

எனவே வழிவிடும் முருகன் என்ற பெயர் இவருக்கு ஏற்பட்டது. இவரை வந்து வழிபட்டு செல்லும் பக்தர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் வாழ்க்கை முழுவதும் துணை வருவதாகவும் நம்பிக்கை உள்ளது.

**அதிசயத்தின் அடிப்படையில்:** இத்தலத்தில் கர்ப்பகிரகத்தில் முருகனும் விநாயகரும் சேர்ந்து அருள்பாலிப்பது மிக மிக சிறப்பு.

இத்தகைய படைப்பை மிக அரிதாகவே காண இயலும் இத்தலத்தில் தான் சனீஸ்வரனின் தாய் சாயாதேவி மரம் வடிவில் அருள் பாலிக்கிறாள். இந்த மரத்துக்கும் சாயாமரம் என்ற பெயருண்டு.



# வழிவிடு முருகன் திருக்கோவில் 86வது ஆண்டு பங்குனி உத்திரப் பெருவிழா

ராமநாதபுரம் மாவட்டம் ராமநாதபுரம் நகரில் மத்தியில் உள்ள பிரசித்திபெற்ற ஸ்ரீ வழிவிடு முருகன் கோவில்உள்ளது.

தமிழகத்தில் இங்கு மட்டுமே விநாயகர் முருகன் சேர்ந்து மூலவராக காட்சி தருகின்றனர்.

இக்கோவிலில் ஆண்டு தோறும் பங்குனி உத்திரம் விழா சிறப்பாக இருக்கும். இந்த ஆண்டு 86 ஆம் ஆண்டு பங்குனி உத்திர பெருவிழா

இன்று ( 23.03.2026 ) திங்கள் கிழமை வளர்பிறை சுக்கில பட்சம் பஞ்சமி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.30 மணிக்குமேல் 7.30 மணிக்குள் விக்னேஸ்வர பூஜை யுடன் தொடங்கியது.

ஏப்ரல் (01.04.2026) புதன்கிழமை வளர் பிறை பௌர்ணமி திதியும் உத்திரம் நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 9.15மணிக்கு கோவிலில் இருந்து புறப்பட்டு நொச்சி வயல் ஊருணிக்கரையில் உள்ளஸ்ரீபிரம்ம புரீஸ்வரர் ஆலயம் அடைந்து அங்கிருந்து காலை 10.15 மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் பால்குடம், பால்காவடி கட்டிப் புறப்பட்டு ஆலயம் வந்து சேர்ந்து பகல் 12.00 மணிக்குள் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகிறது.

புதன்கிழமை இரவு 7.00 மணிக்கு பூக்குழி நிகழ்ச்சி நடைபெறும்.

02.04.2026 வியாழக்கிழமை இரவு அருள்மிகு வழிவிடு முருகன் திருவீதி உலா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

விழா ஏற்பாடுகளை வழிவிடு முருகன் கோவில் பரம்பரை தர்மகர்த்தா க.ஜெயக்குமார் செய்துவருகிறார்.



# அபூர்வ தோற்றத்தில் காட்சிதரும் முருகன் கோவில்கள்

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்பார்கள். முருகனின் அறுபடை வீடுகள் மிகவும் சிறப்பானது,

சில இடங்களில் மட்டும் மிக அரி தாக தோற்றத்தில் காட்சி தருகிறார் எம்பெருமான் முருகன்.

முருகப் பெருமான் குழந்தை வடிவே லன், வேடுவன், சன்னியாசி, நாக சர்பம், தவசி, லிங்க ரூபம் என வித்தி யாசமாக காட்சி தருவதுடன் முருகன் சிலையில் வியர்க்கும் அதிசயம் சிக்கலில் காணலாம்.

அபூர்வ கோலத்தில் முருகன் காட்சி தரும் கோவில்கள்:

- ★ முருகப் பெருமான் ஒரு கையில் வில்லுடனும், மறு கையில் வேலுடனும் காட்சி தரும் தலம் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள திருவிடைக்கழி.
- ★ சனி ஸ்தலமான திருநள்ளாறு தர்ப்பாரண்யேஸ்வரர் கோவிலில் முருகப் கையில் மாம் பழத்துடன் காட்சி தருகிறார்.
- ★ சென்னிமலையில் இரண்டு திருமுகங்கள், எட்டு திருக்கரங்களுடன் முருகன் காட்சி தருகிறார் . இந்த கோவிலுக்கு மேல் காகங்கள் பறப்பதில்லை என்பது இன்னொரு அதிசயம்
- ★ வழக்கமாக அம்மனுக்கு தான் தலைக்கு மேல் ஐந்து தலை நாகம் குடைபிடித்திருக்கும். ஆனால் கர்நாடக மாநிலத்தில் உள்ள நஞ்சன்கூடு நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்தில் முருகன் தலைக்கு மேல் ஐந்து தலை நாகம் குடைபிடித்திருக்கும் காட்சியை தரிசிக்கலாம்.
- ★ கும்பகோணம் வியாழ சோமேஸ்வரர் ஆலயத்தில் முருகப் பெருமான் காலில் பாதரட்சை அணிந்தபடி காட்சி தருகிறார்.
- ★ திருவையாறு ஐயாரப்பர் சன்னதி பிரகாரத்தில் கையில் வில், அம்புடன் இருக்கும் தனுசு சுப்ரமண்யராக முருகன் அருள் பாலிக்கிறார்.
- ★ திருப்போரூரில் முருகன், இடது காலை தரையில் ஊன்றி, வலது காலை மயில் மீது வைத்து இடது கையில் வில்லும், வலதுகையில் அம்பும் ஏந்தியபடி போருக்கும் தயாராவதை போல காட்சி தரும் முத்துக்குமார சுவாமி.
- ★ நாமக்கல் மாவட்டம் பேளுக் குறிச்சியில் முருகன் வேடன் வடிவில் காட்சி தருவது தனிச்சிறப்பாகும். இந்த முருகனின் சிலையில் வியர்வை துளிர்ப்பது அதிசய நிகழ்வாகும்.
- ★ மகாபலிபுரம் அருகே வளவன் தாங்கல் தலத்தில் முருகன், கையில் தண்டம் ஏந்தி தண்டாயுதபாணியாக காட்சி தருகிறார். அவர் கண்களில் நீர் வரும் காட்சி வியப்பான ஒன்றாகும்.
- ★ மயிலாடுதுறை திருவாரூர் சாலையில் நெய்குப்பை எனும் ஊரில் அம்மன் கையில் கைக்குழந்தையாக அமர்ந்தபடி பாலமுருகனாக காட்சி தருகிறார்.
- ★ திருநனிப்பள்ளி, திருக்குறுங்குடி ஆகிய தலங்களில் முருகப் பெருமான் மூன்று கண்களுடனும், எட்டு திருக்கரங்களுடனும் காட்சி தருகிறார்.
- ★ புதுக்கோட்டைக்கு அருகே ஒற்றைக் கண்ணனூரில், ஒரு கையில் ஜப மாலையுடனும், மறு கையில் சின் முத்திரையுடனும் காட்சி தருகிறார் முருகன்.
- ★ கர்நாடக மாநிலம் குக்கே சுப்ரமண்யா கோவிலில் முருகன் பாம்பு வடிவில் காட்சி தருகிறார். இந்த பகுதியில் பாம்புகள் யாரையும் தீண்டுவதுமில்லை, பாம்பை யாரும் துன்புறுத்துவதும் இல்லை.



- ★ கனககிரி தலத்தில் முருகன் பெருமான் கையில் கிளியுடன் காட்சி தருகிறார்.
- ★ செம்பனார் கோவில் முருகப் பெருமான் ஜடாமகுடம் தாங்கி, இரண்டு கைகளிலும் அக்கமாலையுடன், தவக்கோலத்தில் காட்சி தருவது தனிச்சிறப்பாகும்.
- ★ கும்பகோணம் அருகே அழகாபுத்தூர் எனும் ஊரில் மாமன் திருமாலைப் போல் முருகப் பெருமானும் கையில் சங்கு, சக்கரம் ஏந்தி காட்சி தருகிறார்.
- ★ பூம்புகார் அருகே மேலையூரில் திருச்சாய்க்காடு சாயாவனேஸ்வரர் கோவிலில் முருகப் பெருமான் வில், அம்புடன் காட்சி தருகிறார்.
- ★ ஜோலார்பேட்டை ஏலகிரி மலையில் ஜலகாம் பாறை என்னும் இடத்திலுள்ள முருகன் கோவிலில் விக்ரஹம் கிடையாது. ஏழு அடிவேல் வடிவில் வேலவனாக காட்சி தருகிறார் .
- ★ பெரம்பலூர் அருகில் செட்டிகுளம் தண்டாயுதபாணி கோவிலில் முருகன் கரும்போடு காட்சி தருகிறார்.
- ★ நாகப்பட்டினம் மாவட்டம் விளத்தொட்டி பிரம்மபுரீஸ்வரர் ஆலயத்தில் பாலமுருகனாக தொட்டிலில் தவழ்ந்து உறங்கும் கோலத்தில் காட்சி தருகிறார்.
- ★ திருவண்ணாமலை வேலூர் சாலையில் உள்ள வில்வாரணி நட்சத்திர கிரி மலையில் சுயம்பு வடிவ லிங்க திருமேனியாக, நாகாபரணத்துடன் காட்சி தருகிறார். முருகனும், சிவனும் ஒரே வடிவமாக இங்கு தரிசிக்க முடியும்.
- ★ சிவகங்கை மாவட்டம் திருமலையில் அமைந்துள்ள மலைக்கொழுந்தீஸ்வரர் ஆலயத்தில் முருகப் பெருமான் சற்று சாய்ந்த நிலையில் காட்சி தருகிறார். இவருக்கு இடப்புறம் ஆடும், வலப்புறும் மயிலும் எதிரெதிரே இருக்கும் வகையில் காட்சி தருகிறார்.
- ★ ஈரோடு மாவட்டம் காங்கேயம் பாளையம் நட்டாற்றீஸ்வரர் ஆலயத்தில் பக்தர்களை நோக்கி அடியெடுத்து வைப்பதைப போல முருகன் காட்சி தருகிறார்.
- ★ நாகப்பட்டினம் திருவிடைச்சுழியில் உள்ள சுப்ரமணிய சுவாமி கோவிலில் முருகன் தவக்கோலத்தில் காட்சி தருகிறார். முருகனுக்கும், தெய்வானைக்கும் நிச்சயதார்த்தம் நடந்த தலமாக இது கருதப்படுகிறது.
- ★ நாகப்பட்டினம் மாவட்டம் பொரவாச்சேரி கந்தசாமி கோவிலில் உள்ள மூலவர் கந்தசாமி சிலை ஒரே கல்லால் செதுக்கப்பட்டதாகும். மயில் மீது அமர்ந்த நிலையில் இருக்கும் முருகனின் திருமேனி, மயில், திருவாசி உட்பட மொத்த எடையையும் மயிலின் கால்கள் தாங்கி நிற்பது அதிசயமான காட்சியாகும்.

## முருகன் தரும் பலன்கள்

சரவணபவா என்றால்
சகலமும் அருள்வான்
ஷண்முகா என்றால்
சடுதியில் வருவான்!
சேயோன் என்றால்
சந்தோஷம் தருவான்
முருகா என்றால்
முன்வினை அழிப்பான்!
குமரா என்றால்
குறைகளைத் தீர்ப்பான்
கந்தா என்றால்
கண்போல் காப்பான்!
வேலா என்றால் வேண்டும்
வரம் அளிப்பான்!
சுப்பிரமண்யா என்றால்
சுகமே கொடுப்பான்!

வாழ்க வளமாக..
சுகம் வைத்தியசாலை
ECR சந்திப்பு பட்டிணம்காத்தான்,
இராமநாதபுரம்-623 503



காத்திருப்பதை தவிர்க்க முன் அனுமதி பெற்று வரவும்
04567 - 230245, 744 87 244 87, 894 000 4050 94420 45 435, 04567 - 290 435
கண்ணுக்கு - மூலிகை சொட்டு மருந்து இலசவமாக வழங்கப்படும்

சித்தா ஆயுர்வேதா, வர்மா, அக்குபஞ்சர் மற்றும் ஹீலிங் முறைப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- மஞ்சள் காமாலை வைரசினால் வெளிநாடு செல்ல இயலாதவர்கள்,
- நீரடைப்பு, கல்லடைபு, சதையடைப்பு, பித்தப்பை கற்கள் உள்ளவர்கள்,
- முடக்குவாதம்/ யூரிக் ஆசிட் வந்து நடக்க இயலாதவர்கள்
- அனைத்து வகையான மூலம் பவுத்தர நோய்கள்
- பக்கவாதம், முகவாதம் வந்து ஒரு வருடத்திற்குள் உள்ளவர்கள்,
- குழந்தை இல்லாதவர்கள், உயிர் அணுவே இல்லாதவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படும்

முடி உதிர்வை தடுக்க மூலிகை தைலம் கிடைக்கும்

பெண்களுக்கான இலவச மருத்துவ முகாம்

ஆஸதுமா மூச்சுத்திணறல் குணப்படுத்தப்படும்

கருப்பைநார்த் திசுகட்டிகள், எண்டோமெட்ரியோசிஸ், கருப்பை சுழற்சி, சினைப்பை நீர்க்கட்டி, கருப்பை வீக்கம், குழந்தையின்மை சீரற்ற மாதவிடாய் கோளாறுகளுக்கு இலவச ஆலோசனை வழங்கப்படும்



வாழ்க வளமாக..
சுகம் வைத்தியசாலை
ECR, சந்திப்பு, பட்டிணம்காத்தான்,
இராமநாதபுரம் 623 503
744 87 244 87, 894 000 4050
04567 - 290 435
நீர்கட்டி / கொழுப்புகட்டி / மூட்டுவலி / இடுப்பு வலி
கழுத்து வலிகள் நிரந்தரமாக குணமடைய
முன்பதிவு செய்யுங்கள்.

மன அழுத்தத்திற்கு யோகா கற்றுத்தரப்படும்

முகப்பருக்கள், அரும்பாரை மருக்கள் சரியாகும்.

அனுபவமிக்க கைராசி மருத்துவர்கள் பாரம்பரிய மற்றும் தரமான சத்தா, ஆயுர்வேதா, கம்பெனி மருந்துகளுடன் சிகிச்சை அளிக்கப்படும்

மூலிகை வயகரா கிடைக்கும்

நரம்பு தளர்ச்சிக்கு சிறப்பு மருத்துவம் பார்க்கப்படும்.